குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
இலங்கை.

உ

சிவமயம்

# நமச்சிவாயமாலை



ஸ்ரீ சாரதா அச்சியந்திரசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்
1949

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

உ

கணபதி துணை

# நமச்சிவாயமாலை

இது

ஸ்ரீ கா. மகேஸ்வரசர்மா

அவர்களால்

தமது

வண்ணார்பண்ணை

ஸ்ரீ சாரதா அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது

சர்வதாரி வருஷ வைகாசிமீ

1948

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
சுன்னாகம்,
இலங்கை.

உ

கணபதி துணை

# நமச்சிவாயமாலை

## காப்பு

மந்திரநமச்சிவாய, மாலைநான்செப்புதற்குக்
கந்தவேடனக்குமூத்த, கணபதிகாப்புத்தானே.

அறைமறையயனுமாலும், அமரருமுனிவர்தாமும்
முறைமுறை வணங்கியேத்தும், முதல்வனே நமச்சிவாய

ஆதியாய் வேதநான்காய், அடிமுடிதெரியாவண்ணஞ்
சோதியாய் நிறைவாய்நின்ற, துணைவனே நமச்சிவாய

இணையடி தேடிக்காணா, ஏழுலகளந்த மாயன்
கணையதா வெயின்மூன்றெய்த, கடவுளே நமச்சிவாய

ஈட்டிய பொருள்போலுன்றன், இணையடிபணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன்மேனி, வள்ளலே நமச்சிவாய

உமையொரு பாகம்வைத்த, உம்பர்கடம்பிரானே
அமைதரு மணியேமுத்தே, அண்ணலே நமச்சிவாய

ஊனுமா யுயிருமாகி, உள்ளுமாய்ப் புறம்புமாகித்
தானுவாய்ச் சகத்துக்கெல்லாந், தந்தையாநமச்சிவாய

எழுபிறப் பதனென்மாழ்கும், என்னுயிர்க் கிரங்கிவந்து
பழுதற வாண்டுகொள்ளும், பரமனே நமச்சிவாய

ஏடவிழ் கோதைமாதர், இள்முலை மயக்கப்பட்டு
நீடுத லொழிக்கவல்ல, நிமலனே நமச்சிவாய

ஐயமேற் றுண்டாய்பாதம், அன்பிலேன் றலைமேல்வைத்த
செய்யனே வானோர்போற்றும், தேவனே நமச்சிவாய

ஒன்பது வாயிற்கூட்டில், ஒடுங்குபி ருய்யும்வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள்காட்டும், புனிதனே நமச்சிவாய

ஓமெனு மெழுத்தினுள்ளே, ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணைநல்கும், வள்ளலே நமச்சிவாய

ஔவியம்பேசாவண்ணம், அடிமையைத் தடுத்தாட்கொள்ளும்
திவ்விய மணியேமுத்தே, தேவனே நமச்சிவாய

அக்கினைப் பூண்டுகொண்டே, அரியவெண்ணீறுபூசுஞ்
சொக்கனே செக்கர்மேனித், தூயனே நமச்சிவாய

கம்பமார் களிறுரித்த, கச்சியே கம்பாசெம்பொன்
அம்பலத் தாடுகின்ற, அண்ணலே நமச்சிவாய

ஙகரம்போல் வளைந்துழன்று, நாயினே னுணவுதேடும்
பகரொணா வின்ன தீர்க்கும். பரமனே நமச்சிவாய

சத்தியுஞ் சிவமுமாகித், தாணுலாய்ச் சகத்துக்கெல்லாம்
முத்தியே களிப்பாயாதி, முதல்வனே நமச்சிவாய

ஞமனுட னிந்திரற்கும், நாரணற் காரணற்குஞ்
சமனுற முதலாய்நின்ற, தாணுவே நமச்சிவாய

இடவிய கபாலமேந்தி, எழிரண் டுலகமெல்லாந்
தடவியுங் காணவொண்ணாச், சங்கரா நமச்சிவாய

இணங்கிய கமலப்பொற்றாள், இருவரு மேத்திநின்று
வணங்க வம்பலத்துளாடும், வானவா நமச்சிவாய

தண்டமிழ் முனிவன்றன்னைச்; சமமுறத் தென்பாலேவும்
அண்டரோ டயன்மால்காணா, ஆதியே நமச்சிவாய

நஞ்சணி கண்டத்தானே, நதிமதிச் சடையினானே
கொஞ்சுபச் சிளம்பெண்பாகர், கொண்டவா நமச்சிவாய

பண்டுல களந்தமாலும், பங்கயத் தயனுந்தேடிக்
கொண்டுசென் றறியவொண்ணாக்; குரவனே நமச்சிவாய

மங்கையோர் பாகம்வைத்து, வளர்பிறை முடிமேல்வைத்துச்
செங்கையின் மழுமான்வைத்த, தேவனே நமச்சிவாய

இயக்கரு முனிவர் தாமும், இருகரங்குவித்து நின்று
வியக்கவும் பலத்திலாடும், விமலனே நமச்சிவாய

அரகர சிவனேயென்றும், அம்பலத் தாடியென்றும்
பரவுவார் துயரந்தீர்க்கும் பரமனே நமச்சிவாய

இலகிதழ் மடவார் தங்கள், ஏவலுக் குரியனாகி
அலமரு மென்னையாண்ட, அமலனே நமச்சிவாய

வளமுறு மங்கைதன்னை, மற்றிடப் பாகம்வைத்தே
ஒளிமதிக் கீற்றைச்சூடும், ஒருவனே நமச்சிவாய

அழகிய முருகனுக்கோர், ஆறுமா முகமுங் கூர்மை
பழகிய வேலுமீந்த, பரமனே நமச்சிவாய

இளமையு மூப்புமில்லா, இறைவனே எம்பிரானே
வளமையாங் கருணைமோன, வள்ளலே நமச்சிவாய

அறவனே பாதந்தேடி, அன்றிரு வோருங்காணா
இறைவனே யென்னைக்காக்கும், ஈசனே நமச்சிவாய

அனந்தலி னின்றுன்போற்றி, அருச்சிக்கு மடியார் தங்கள்
இனந்தனி லென்னைவைப்பாய், ஈசனே நமச்சிவாய

கரியுரி யதனைப்போர்த்துக், கபாலமுங் கையிலேந்தித்
திரிபுர தகனஞ்செய்த தேவனே நமச்சிவாய

காலனை யுதைத்தகாலா காமனை யெரித்தகண்ணா
பாலனைக் கறியதாக்கும், பரமனே நமச்சிவாய

கிளிமொழி யமுதச்செவ்வாய்க், கௌரியைப் பாகம்வைத்த
ஒளிமதிச் சடையினானே, யொருவனே நமச்சிவாய

கிண்டுவெற் பெடுத்தவீரர், சேடிலாவரக்கன் றன்னை
மாண்டுக விரலாலூன்றார், வள்ளலே நமச்சிவாய

குழைமுமி ழடருங்கண்ணாள், கோதையைப் பிரிந்தபோது
பிறைசெயு மதனைக்காய்ந்த, பிஞ்ஞகா நமச்சிவாய

கூவிள மறுகுதும்பை, கொன்றைவெள் ளெருக்கூமத்தை
மேவிய சடையினானே, வித்தகா நமச்சிவாய

கெங்கையைச் சடைமேல்வைத்துக், கௌரியைப்பாகம்வைத்தல்
அங்சணா நீதியோசொல், ஐயனே நமச்சிவாய

கேசவன் வணங்கிக்கண்ணார், சேள்கிளர்கஞ்ராஞ்சூட்ட
ஆசியோ டாழியீந்த, அமலனே நமச்சிவாய

கைச்சிலை பேருவாகக், கரியமால் பகழியாக
உச்சிதப் புவித்தேரேலும், ஒருவனே நமச்சிவாய

கொற்றவன் றனக்குமுன்னே, குதிரையி லேறிக்காட்டிப்
பொற்றகில் கோலாற்சொன்னார், பூரணாநமச்சிவாய

சோணமா யலையில்வாழுங், கோதிலா வாதியேகீ
ஆணல்லை பெண்ணு ல்லை, அத்தனே நமச்சிவாய

சந்திரன் விளங்குஞ் சென்னித். தலைவனே தம்பிரானே
இந்திர னிமையோர் போற்றும், இறைவனே நமச்சிவாய

சாந்தணி முலையாடன்னைத்; தண்புன லெனப்பேர்மாற்றி
ஏந்துசெஞ் சடையெம்மானே, இறைவனே நமச்சிவாய

சிரமது கையிலேந்திச் சிரிய முனிவர்தங்கள்
விரகினை யழித்தமேரு வில்லியே நமச்சிவாய

சீதள கமலவாவித் திருநாவ லூரன்றன்னைச்
சாதனங் காட்டியாண்ட தாணுவே நமச்சிவாய

சுத்தவெண் ணீறுபூசிச் சுடலையி னடனமாடும்
அத்தனே யாரூர்வாழும் அண்ணலே நமச்சிவாய

சூரியன் றுயரந்தீர்த்தாய் தோன்றிமுப் புரத்தைச்சுட்டாய்
ஆரிய வெள்ளிவெற்பின் அத்தனே நமச்சிவாய

செஞ்சிலை கையிலேந்திச் சிரித்துமுப் புரமெரித்தாய்
தஞ்சமென் றுனையடைந்தேன் தாணுவே நமச்சிவாய

சேதன வடியாரோடு திருப்பெருந் துறையில்வந்து
வாதவூ ரரசையாண்ட வாதனே நமச்சிவாய

சைவினை யைம்புலன்க, டமைமனஞ் சாராவண்ணம்
கைவா மருளவேண்டுங், கடவுளே நமச்சிவாய

சொரிமலர்க் கொன்றைதும்பை சொல்லிய வறுகுதாளி
விரிமலர்ச் சடையாய்வெள்ளி வெற்பனே நமச்சிவாய

சோலைசூ ழாலவாயிற் சோதியே சமணைமாய்க்கப்
பாலரு வாயினர்க்காப் பரிந்தருள் நமச்சிவாய

தந்தையுந் தாயுமில்லாத் தாணுவே யாண்பெண்ணல்லாய்
இந்திர னயன்மால் போற்றும் இறைவனே நமச்சிவாய

தாதவிழ் கொன்றைதும்பை சங்கொடு தலையுங்கொண்ட
நாதனே வேதமோது நம்பனே நமச்சிவாய

திரிபுர மெரித்தமூர்த்தி தென்னவன் முன்னைமுன்னாள்
நரிதனைப்பரி யதாக்கும் நம்பனே நமச்சிவாய

தீதிலா வாதவூரர் செய்கைகண் டுளமகிழ்ந்த
நாதனே பரனேவானோர் நண்பனே நமச்சிவாய

துணைவனை யன்பர்தங்கள், துன்பறுத்தருளுமூர்த்தி
பணைமுலை யுமையாள்பங்கா, பரமனே நமச்சிவாய

ஆறுகந் தார்க்காச் சென்ற, சோலைசூழாரூரையா
ஆதியே யரனேவெள்ளி, பசலனே நமச்சிவாய

தென்னவ னாகக்கூடற், சேர்ந்துசெங் கோல்செலுத்தி
அங்கர் தன்னையாண்ட. அமலனே நமச்சிவாய

தேடியேயிருவர்காணாத், திருவடியனைத்துள்யாரும்
நாடியேவணங்கின்ற நம்பனேநமச்சிவாய

தையலோர்பாகம்வைத்துச், சடையிலேகங்கைவைத்த
ஐயனேயாரூர்வாழும், அண்ணலேநமச்சிவாய

தொல்லுலகெல்லாம்போற்றுஞ், சோதியேசூலபாணி
வில்லெனமேருவாக்கும், வித்தகாநமச்சிவாய

தோத்திரஞ்செய்மாயற்குச், சுடரொளியாழியீந்த
ஆத்தனேயடியான்பிற், களியனேநமச்சிவாய

நஞ்சினையருந்திமாயன், நான்முகன்முதலோர்நாண
அஞ்செழுத்துருவமான, அத்தனேநமச்சிவாய

நாரணனலரோனிந்த்ரன் ,நாடிமுன்வணங்கிநின்றே
ஆரணமோதுகின்ற ஆதியேநமச்சிவாய

நிற்பவர்நெறியைநோக்கி ,நெஞ்சைவிட்டகலாதானை
கற்பனைகடந்தசோதிக், கடவுளேநமச்சிவாய

நீறணிமேனியானே, நிமலனேயமரர்கோவே
ஆறணிசடையினானே, அண்ணலேநமச்சிவாய

நுண்ணிடைமாதுபாகா, நோக்குவார்தம்மைநோக்குங்
கண்ணுதற்பரனேதேவா, கடவுளேநமச்சிவாய

நூபுரபதமாதோடு, நுவலருஞ்சபையிலாடும்
மாபுரத்தவர்கள்காலா, வானவாநமச்சிவாய

நெஞ்சகமலரிலுன்னை, நினைவறநினைந்தபேருக்
கஞ்சலென்றருளிச்செய்யும். அண்ணலேநமச்சிவாய

நேத்திரந்தன்னால்வேளை, நெருப்பெழச்சுட்டுவிட்டாய்
சாத்திரமுனிவோர்போற்றுந் தாணுவேநமச்சிவாய

நைந்துனைநினைப்பார்பாவம், நாசமதாக்கிநிற்பாய்
பைந்தொடிபாகங்கொண்ட, பரமனேநமச்சிவாய

நொந்தவரினைத்தோர்தம்மை, நொடியளவினில்வாழ்விக்குங்
கந்தரங்கறுத்தமூர்த்தி, கடவுளேநமச்சிவாய

நோக்கமூன்றுடையாயென்னை, நோக்கியேதுரியாதீதத்
தூக்கத்தில்வைப்பதென்றோ, சொல்லுவைநமச்சிவாய

நௌவியையேந்துங்கையாய், நயமுடனடியார்தங்கள்
வெவ்வினையெல்லாந்தீர்க்கும், விமலனேநமச்சிவாய

பத்தராய்ப்பணிவார்தம்மைப், பதங்கொடுத்தாளுமையா
சுத்தனேவேதஞ்சொன்ன, துணைவனேநமச்சிவாய

பாடுவார்மூவர்தம்மைப், பதங்கொடுத்தாண்டமூர்த்தி
தேடுவார்தேடுகின்ற, செம்பொனேநமச்சிவாய

பிறையணிசடையினானே, பிஞ்ஞகாவடியார்க்கெல்லாம்
குறைவறவாழ்வளிக்குங், கொற்றவாநமச்சிவாய

ஏடுறப்பூசிப்பார்தம், பெருவினையறுக்குமூர்த்தி
ஆடல்சேரெருதிலேறும், அண்ணலேநமச்சிவாய

புகலூறுங்கல்லாலன்பு, பூண்டெறிசாக்கியர்க்குத்
தகவுறமுத்திநல்குந், தாணுவேநமச்சிவாய

பூசுவெண்ணீறுபொங்கப், பொருவிலாவம்மைகாண
நேசமோடாலங்காட்டில், நிருத்தஞ்செய்நமச்சிவாய

பெண்ணமுதனையார்நாணும், பெட்புறுவளையுந்தூசும்
எண்ணுறுபலியாக்கொண்ட, இறைவனேநமச்சிவாய

பேயுடன்காட்டிலாடும், பிஞ்ஞகாபெரியோர்தங்கள்
தூயநன்மனத்துளானே, சுத்தனேநமச்சிவாய

பையரவணையிற்றங்கும், பாரளந்தோற்குப்பாதி
மெய்யளித்தருள்கூர்ந்திட்ட, விண்ணவாநமச்சிவாய

பொசியுறுதேம்பூஞ்சோலைப், புகலியிற்பிள்ளையார்க்குச்
சசியொளிமுத்தின்பந்தல், தந்தவாநமச்சிவாய

போதகமாகிவந்த, புன்மைசோசுரன்றன்னை
நோதகவுரித்துப்போர்த்த, நுண்ணியாநமச்சிவாய

பௌவத்திற்சிலையோடாழும், படியமண்செய்யவப்பர்க்
செவ்வைதகற்றிப்பேற, தீந்தவாநமச்சிவாய

மறுவறுமாதிசைவ, மாபிற்சுந்தரார்க்குத்தூதாய்ச்
செறிநிசிபாவைவாயிற், சென்றவாநமச்சிவாய

மான்மழுக்கையிலேந்தி, வன்னியோர்பாகம்வைத்தே
ஆன்முதுகேறுஞ்சோதி, ஐயனேநமச்சிவாய

மிடற்றினிற்காளகூட, விடத்தினைக்கறுக்கவைத்தாய்
கடத்தினில்விருப்பம்வைத்தாய், நம்பனேநமச்சிவாய

மீனெனவந்தமாயன், விழியினையிடந்துசாத்தி
ஆனதோர்மேனிநல்கும், அண்ணலேநமச்சிவாய

முன்னமேபிரமன்றன்னை, முனிந்ததோர்தலைபறுத்தாய்
என்னைவந்தாண்டுகொள்வாய், ஈசனேநமச்சிவாய

மூர்க்கனாந்தக்கன்வேள்வி, முன்புசென்றழித்துவெற்றி
மார்க்கநகண்டிட்டசோதி வானவாநமச்சிவாய

மெலிவிலாத்தவத்தோர்கோப மேலுறமுன்னாள்விட்ட
புலிதனையுரித்துச்சாத்தும் புண்ணியாநமச்சிவாய

மேயபேருணர்விற்கெட்டா வெளியதாயணுவுமாகி
ஆயசிற்சொரூபமான அண்ணலேநமச்சிவாய

மையுறுகுழலாள்கூடல் மங்கையர்க்கரசியார்முன்
செய்சுறுபணிகருவந்த தேவனேநமச்சிவாய

மொழிதருநால்வர்தங்கள் முதுமறைத்தமிழ்ப்பாமாலை
ஒழிவின்றிச்சூடிக்கொள்ளும் ஒருவனேநமச்சிவாய

மோகினிவடிவங்கொண்ட முகில்வண்ணன்றன்னைச்சேர்ந்து
சோகமிலையனாரைத் தோற்றியோய்நமச்சிவாய

மௌவலங்குழலார்மோக வலையறுத்துயர்சித்தாந்தச்
செவ்வையாமுத்தியென்று சித்திக்குநமச்சிவாய

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரசம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

உ

# ஸ்ரீ சாரதா அச்சியந்திரசாலை

484, சிவலிங்கப்புளியடி, வண்-கிழக்கு

யாழ்ப்பாணம்

இவ்வியந்திரசாலையில் கிரந்தம் தமிழ் இங்
லீஸ் முதலிய பாஷைகளில் புஸ்தகம் விளம்பர
உறுதி வகைகள் பற்றுச்சீட்டு பில்புஸ்தகங்கள்
விளம்பரங்கள் விவாகப்பத்திரங்கள் காட்ஸ், வே
பர்வகைகளும் இன்னும் எவ்வித அச்சுவேலைகளும்
துப்பரவாக குறித்த நேரங்களில் செய்து கொடுக்
கப்படும்.

கா. மகேஸ்வரசர்மா
புரொப்றயிற்றர்